தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் வெளிப்புற முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை

இந்தியா மற்றும் உலகளவில் பணியிலிருக்கும் வேளாண் பட்டதாரிகள் வெளிப்புற முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பின் மூலம் முனைவர் பட்டம் பெற ஓர் அறிய வாய்ப்பு. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2015-16ம் ஆண்டிற்கான வெளிப்புற முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பில் (External Ph.D. by research) 26 துறைகளிலும் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. முதுநிலை வேளாண் பட்டதாரிகள் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் பணியிலிருப்பவர்கள் மட்டும் இந்த நான்காண்டு படிப்பில் சேரலாம்.

http://tnau.ac.in என்ற பல்கலைக்கழக இணையதள வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பொழுது, விண்ணப்பக் கட்டணத்திற்கான (Rs. 1000/- SC/ST Rs. 500/-) வங்கி தொடர்பான இணைப்பு தரப்பட்டிருக்கும்.

இணையதள மூலம் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பபடிவம் பதிவிறக்கம் செய்து அதனுடன் தகவல் குறிப்பேட்டில் (Information Brochure) குறிப்பிட்ட அனைத்து தேவையான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பக் கட்டணத்திற்கான (பொதுப்பரிவினருக்கு Rs. 1000/- மற்றும் SC/ST Rs. 500/- (ஒரு பாடத்திற்கு)) ரசீது (e-receipt) ஆகியவற்றையும் இணைத்து **முதன்மையர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்

வெளிப்புற முனைவர் ஆராய்ச்சி பட்டப்படிப்பிற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி தேதி 08.12.2014.

நுழைவுத்தேர்வு மற்றும் மாணவர் சேர்க்கை பற்றிய அனைத்து தகவல்களும் மின் அஞ்சல் (E-mail) மூலமாக மட்டுமே தெரிவிக்கப்படும். ஆகவே அனைத்து மாணவர்களும் தங்களது மின் அஞ்சல் மற்றும் கைபேசி எண் சரியாக விண்ணப்படிவத்தில் பதிவு செய்ய வேண்டும், மேலும் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தினையும் தினமும் தவறாது பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ***<u>நினைவில் கொள்ள வேண்டிய நாட்கள்</u>***

| விவரம் | முனைவர் |
|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 08.12.2014 |
| நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள் | 15.12.2014 |
| தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வெளியிடும் நாள் | 24.12.2014 |
| மாணவர் சேர்க்கை மற்றும் கல்லூரி தொடங்கும் நாள் | 31.12.2014 |
| முதல் பருவம் பதிவு செய்ய வேண்டிய நாள் | 02.01.2015 |

மக்கள் தொடர்பு அலுவலர்